# தொழிலாளர் சம்பள விடயத்தில் அரசியல் வேண்டாம் அவர்களின் நலன் கருதியே நாம் செயற்படுகின்றோம்!

## இ.தொ.காவின் எம்.பி. மருதபாண்டி ராமேஷ்வரன்




மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸால் முன்னெடுக்கப்பட்டு வரும் தொழிற்சங்க நடவடிக்கைக்கு அனைத்துத் தரப்பினரும் ஆதரவு வழங்க வேண்டும் என்று இ.தொ.காவின் தவிசாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸால் கொழும்பில் இன்று முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தையடுத்து நுவரெலியா, பதுளை, இரத்தினபுரி, மாத்தளை உள்ளிட்ட பகுதிகளிலும் தொழிற்சங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.


2 ►



மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 06 வெள்ளிக்கிழமை 19.04.2024 கதிர் 234







# ரஷ்ய இராணுவத்தில் தொழில் பெற்றுத் தரப்படும்!

## பெருமளவு இலங்கையர்களை ஏமாற்றிய முன்னாள் இராணுவ மேஜர் கைதானார்!

ரஷ்ய இராணுவத்தில் தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி பெருமளவிலான இலங்கையர்களை ஏமாற்றி ரஷ்யாவிற்கு அனுப்பி வந்த சட்டவிரோத குழுவொன்றைப் பற்றிய தகவலை வெளியிட்டுள்ள குற்றப் புலனாய்வுத் திணைக்களம், இது தொடர்பில் ஓய்வுபெற்ற இராணுவ மேஜர் உட்பட இருவரைக் கைது செய்துள்ளது.

இந்த பெரும் மோசடியில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் இராணுவ மேஜர் ஜெனரல் ஒருவரும் கைது செய்யப்பட உள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்கள வட்டாரங்கள் தெரித்துள்ளன. இந்த இரண்டு சந்தேக நபர்களாலும் 43 இலங்கையர்கள் ரஷ்யாவிற்கு அனுப்பப்பட்டுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது. ரஷ்ய ராணுவத்தில் அதிக சம்பளம் தருவதாக கூறி இவர்கள் அனுப்பி வைக்கப்பட்டதாகவும், அதன்பின்னர்




இதுவரை அவர்கள் குறித்த எந்த தகவலும் இல்லை எனவும் குற்றப் புலனாய்வுத் துறை கூறுகிறது.

இவ்வாறு ரஷ்யாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டவர்களில் ஒவ்வொருவரிடமும் 8 இலட்சம் ஷரூபாவிற்கும் அதிகமான பணம் பெறப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. சந்தேக நபர் மட்டக்களப்பு பகுதியில் உள்ள முகாமில் பணியாற்றி ஓய்வு பெற்ற


2 ►


# தமது காரியங்களை தாமே செய்துகொள்ளலாமென தொழிற்சங்கங்கள் தப்புக் கணக்குப் போடுகின்றன!

## எதுவுமே அரசியல்வாதிகளால் மட்டுமே முடியும் என்கிறார் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா



கனவில்கண்டதை உளறுகின்ற வாய்சொல்வீரர்களுக்கு இனி வரும் தேர்தலில் மக்கள் நல்ல பாடம் புகட்டுவார்கள் என துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

தமது காரியங்களை அரசியல்வாதிகள் இல்லாமல் தாமே செய்து கொள்ள முடியும் என தொழிற்சங்கங்கள் நினைத்தாலும், நடக்க வேண்டிய எந்தவொரு காரியமும் அரசியல்வாதிகளால் தான் நடந்துள்ளது என்பதை இந்த தொழிற் சங்கங்கள் நினைவில் கொள்ளல் வேண்டும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அரசியல் வாதிகள் நாட்டுக்காகவும், நாட்டு மக்களுக்காகவும் ஆற்றும் பணிகளை இன்று தொழிற்சங்கங்கள் பாராட்டுவதில்லை, எனினும் மக்கள் அவற்றை பாராட்டுகின்றனர் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

துறைமுக அதிகார சபையின் பொறியியல் இயந்திரவியல் பிரிவு மற்றும் இயந்திர உபகரண பிரிவு ஆகியன ஒன்றிணைந்து துறைமுக அதிகார சபையின் பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்ட பிரைம்மூவர் வாகனங்களை திருத்தி புதுப்பித்து துறைமுக அதிகார சபையிடம்


2 ►


# அருட்தந்தை சிறில் காமினி வாக்குமூலம் வழங்கினார்!



கொழும்பு பேராயர் இல்லத்தின் ஊடகப்பேச்சாளர் அருட்தந்தை சிறில் காமினி குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டிருந்த நிலையில் இன்று காலை அவர் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில் விசாரிப்பதற்காக அருட்தந்தை சிறில் காமினிக்கு இன்று காலை குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு வருகை தருமாறு ஏற்கனவே அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது.

அதன்படி தற்போது


2 ►




## தியாக தீபம் அன்னை பூபதியின் நினைவேந்தல் யாழ்ப்பாணத்தில்

தியாக தீபம் அன்னை பூபதியின் 36 ஆம் ஆண்டு நினைவேந்தலின்


2 ►


## முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால மீதான தடையுத்தரவு மே 9 வரை நீடிப்பு

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இலங்கை சுதந்திர கட்சியின் தலைவராக செயற்படுவதைத் தடுக்கும் வகையில் கடந்த 4ஆம் திகதி பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவை அடுத்த மாதம் 9ஆம் திகதி வரை நீடிப்பதற்கு கொழும்பு பிரதான மாவட்ட நீதிபதி சதுன் விதான நேற்று (18) உத்தரவிட்டார்.

இந்தத் தடை உத்தரவுக்கு அனைத்து தரப்பினரும் ஆட்சேபனைகளை எழுத்துப்பூர்வமாக எதிர்வரும் 9 ஆம் திகதிக்குள் தாக்கல் செய்ய மாவட்ட நீதிபதி உத்தரவிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவினால் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாட்டினை பரிசீலித்த மாவட்ட நீதிபதி இந்த தடை உத்தரவை பிறப்பித்துள்ளார்.

பிரதிவாதியான மைத்திரிபால சிறிசேன


2 ►


## நாட்டிலுள்ள 14 இடர் மாவட்டங்களில் நிறுவப்பட்ட 330 தானியங்கி மழை மானிகளில் 109 செயலிழப்பு

### மண்சரிவு அபாயத்தை முன்கூட்டியே கண்டறிய முடியாத நிலை!

தேசிய கணக்காய்வுக்கு அலுவலக அறிக்கையின்படி, நாட்டிலுள்ள 14 இடர் மாவட்டங்களில் நிறுவப்பட்ட 330 தானியங்கி மழை மானிகளில் கடந்த 2023 ஆம் வருடம் ஒகஸ்ட் மாதத்தின் போது 109 தானியங்கி மழை மானிகள் செயலற்ற நிலையில் இருப்பதாக அறியவந்துள்ளதாக தெரிவித்துள்ளது.

இவ்வாறு மழை மானிகள் செயலிழந்துள்ளதால், மண்சரிவு அபாயத்தை முன்கூட்டியே கண்டறிய முடியாத நிலை உள்ளதாகவும் அந்த அறிக்கையின் மூலம் தெரியவந்துள்ளது.

மழைமானிகளை பராமரிக்கும் பணியை தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவன தலைமை அலுவலக அதிகாரிகள் மேற்கொள்வதாகவும், அங்கு குறைந்த எண்ணிக்கையிலான அலுவலர்களே கடமையில் இருப்பதால், 14 மாவட்டங்களில் பொருத்தப்பட்டுள்ள மழைமானி அமைப்புகளை பராமரிப்பதில் சிக்கல் உள்ளதாக மேற்படி


2 ►



- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

## தமது.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

தனியார் துறையினரால் இந்த ப்ரைமோவரை புதுப்பிக்க சுமார் 25 இலட்சம் ரூபா மதிப்பிடப்பட்டதாகவும், எனினும் துறைமுக அதிகார சபையின் இயந்திர பொறியியல் பிரிவினரால் 5 இலட்சம் ஷரூபா செலவில் ஒரு வாகனத்தை திருத்தியமைக்க முடிந்தமையால் துறைமுக அதிகாரசபையால் சுமார் 100 லட்சம் ஷரூபாய் சேமிக்க முடிந்ததாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்வாறு சுமார் 140 ப்ரைம் மூவர் வாகனங்கள் கொழும்பு துறைமுகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டு வருவதுடன், இன்னும் சுமார் 30 வாகனங்கள் பழுதடைந்த நிலையில் இருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ரெசி-81)

## ரஷ்ய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இராணுவ மேஜர் ஆவார். ராணுவ பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் இந்த மோசடியில் இவர் இணைந்துள்ளார். வாரியபொல பிரதேசத்தில் வைத்தே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த மோசடியில் ஈடுபட்டுள்ள மற்றைய நபர் திகன பிரதேசத்தில் வசிக்கும் 63 வயதுடையவர் ஆவார். இவ்வாறு ரஷ்ய ராணுவத்தில் தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி தம்மிடம் லட்சக்கணக்கில் பணம் மோசடி செய்ததாகக் கூறி 17 பேர்குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொண்ட விசாரணைகளின் போதே இந்த மோசடி குறித்த தகவல் வெளியாகியுள்ளது.

இவ்வாறு ரஷ்ய ராணுவத்தில் தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி, இந்த சட்டவிரோத கும்பல் இன்னும் ஏராளமானோரை ரஷ்யாவுக்கு அனுப்பி மோசடி செய்துள்ளதாக குற்றப்புலனாய்வு திணைக்களம் சந்தேகம் தெரிவித்துள்ளது. (ரெசி-82)

## தொழிலாளர்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது குறித்து மருதபாண்டி ராமேஷ்வரன் தெரிவிக்கும்போது, மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1700 ஷரூபா சம்பள உயர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ் தீவிர முயற்சிகளை முன்னெடுத்துவருகின்றது. சம்பள நிர்ணயசபை மற்றும் தொழில் அமைச்சு ஊடாக கம்பனிகளுக்கு அழுத்தம் பிரயோகிக்கப்பட்டுவருகின்றது.

எதிர்வரும் 24 ஆம் திகதி சம்பள நிர்ணய சபை கூடவுள்ளது. இதன்போது சாதகமான முடிவு கிட்டும் என நம்புகின்றோம். இதற்கிடையில் பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் போராட்டங்களையும் காங்கிரஸ் ஏற்பாடு செய்துள்ளது. தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வை வென்றெடுப்பதற்கு தொழிற்சங்கங்கள் ஒன்றுபட வேண்டும். தொழிலாளர்களும் இதனையே எதிர்பார்க்கின்றனர்.

ஆனால், ஒரு சிலர் அரசியல் நோக்கில் விதண்டாவாத விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர். தமது இயலாமையை மூடி மறைத்துக் கொள்வதற்காக காங்கிரஸ் மீது வசைபாடி வருகின்றனர்.

தொழிலாளர்களின் நலன் கருதியே காங்கிரஸ் அனைவரையும் அரவணைத்துக் கொண்டு தொழிற்சங்கச் சமரை முன்னெடுக்க எதிர்பார்க்கின்றது.

எனவே, உதவி வழங்காவிட்டாலும் காலை வாராமல் இருக்கும் வகையில் செயற்பட வேண்டும். தேர்தல் காலத்தில் அரசியல் செய்யலாம். சம்பள விடயத்தில் அரசியலைத் திணிக்க வேண்டாம், என்று குறிப்பிட்டார். (04)

## அருட்தந்தை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் இன்று காலை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்குச் சென்று வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான உண்மைகள் தனக்கு தெரியும் என்றும், எனவே அது தொடர்பாக விசாரிப்பதற்கு அழைக்கப்பட்டதாக குற்றப்புலனாய்வுத்திணைக்களத்தினால் அனுப்பப்பட்ட கடிதத்தில் குறிப்பிட்டிருந்ததாகவும் அருட்தந்தை சிறில் காமினி தெரிவித்திருந்தார். (04)

## தியாகதீபம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இறுதி நாள் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெற்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபிக்கு முன்பாகக் கொட்டகை அமைத்து நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது பொதுச்சுடர் ஏற்றப்பட்டு மலர்மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

அன்னை பூபதியின் 36 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு வடக்கு, கிழக்கு மற்றும் புலம்பெயர் தேசங்களிலும் இன்று நடைபெற்று வருகின்றது. (அ)

## நாட்டிலுள்ள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தானியங்கி மழை மானிகளின் உட்புற கூறுகளை முறையாக பராமரிக்காததால், இவை அடிக்கடி பழுதடைந்து வந்துள்ளன. 330 மழை மானி அமைப்புகள் இருந்தாலும், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் நிலச்சரிவு ஆராய்ச்சி மற்றும் இடர் முகாமைத்துவப் பிரிவு ஆகியன, 251 தானியங்கி மழை மானி அமைப்புகளின் தரவுகளை மட்டுமே பேரிடர் முகாமைத்துவ மையத்தின் அவசர செயல்பாட்டு மையத்துடன் இணைத்துள்ள எனவும் கணக்காய்வு அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. (ரெசி-84)

## முன்னாள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தன்னிச்சையாக தீர்மானங்களை எடுப்பவர் எனவும், உறுதியான கொள்கை இல்லாதவர் எனவும், கட்சியின் அரசியலமைப்பு மற்றும் கொள்கைகளை மீறும் வகையில் செயற்படுபவர் எனவும், கட்சியின் வளர்ச்சிக்காக பாடுபடும் நபர்களை கட்சியிலிருந்து அவர் நீக்குவதால் கட்சி சீரழிந்து வருவதாகவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க மனு மூலம் நீதிமன்றத்தில் தெரிவிதிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரெசி-83)

## கோத்தபாய பாவித்த ரூ.10 கோடி மதிப்புள்ள வாகனம் மொடல் அழகி பியூமி ஹன்சமாலி வசமானது எப்படி?

### 'மகென் ரட்டட' அமைப்பின் தலைவர் புகார்

முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய பயன்படுத்திய சுமார் 10 கோடி ரூபாய் மதிப்புள்ள 1949 ரேஞ்ச் ரோவர் வாகனத்தை பிரபல மொடல் அழகியான பியூமி ஹன்சமாலி பெற்றுள்ளமை சந்தேகத்திற்குரியது என 'மகென் ரட்டட்ட' என்ற அமைப்பின் தலைவர் சஞ்சய் மஹவத்த சட்டவிரோத சொத்துக்கள் பிரிவிடம் புகாரளித்துள்ளார்.

இந்த முறைப்பாட்டை முன்வைத்த அவர் இது குறித்து தெரிவிக்கையில் "நடிப்புத் துறையில் முக்கிய பங்கினை வகிக்கா அழகூட்டல் கிரீம்களை மட்டுமே விற்பனை செய்து வரும் பியுமி ஹன்சமாலி, முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய பயன்படுத்திய சுமார் பத்து கோடி மதிப்பிலான வாகனத்தை தன் வசம் சொந்தமாக வைத்திருப்பது சிக்கலுக்குரியதாக உள்ளது" என்றார்.

இந்த விவகாரத்தை விரைவாக விசாரித்து, உண்மையை வெளிக்கொணர வாய்ப்பளிக்குமாறு சட்டவிரோத சொத்துக்கள் தடுப்புப் பிரிவினரிடம் சஞ்சய் மஹவத்த கேட்டுக் கொண்டுள்ளார். (ரெசி-85)

## எரிபொருள் விலை அதிகரிப்பு!

ஈரான் பகுதியில் இஸ்ரேல் ஏவுகணை தாக்குதல் நடத்தியதாக வெளியான தகவலை அடுத்து, உலக சந்தையில் எரிபொருள் மற்றும் தங்கத்தின் விலைகள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இன்று ஆசிய சந்தைகளில் ப்ரெண்ட் கச்சா எண்ணெய் பீப்பாய்க்கு 3 வீதம் உயர்ந்து 90 டொலராக உள்ளது அதே நேரத்தில் தங்கம் ஒரு அவுன்ஸ் 2,400 டொலராக அதிகரிக்கப்பட்டுள்ளது

மேலும், ஜப்பான், ஹாங்காங், தென் கொரியா ஆகிய நாடுகளில் பங்குச் சந்தை சரிந்துள்ளதாகவும் மத்திய கிழக்கில் அதிகரித்து வரும் போர் குறித்து பங்குச் சந்தை முதலீட்டாளர்கள் மிகுந்த கவலையடைந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (04)

## வறட்சியால் 11,000 பேர் பாதிப்பு

இலங்கையில் நிலவும் வறட்சியான காலநிலையால் 3 ஆயிரத்து 646 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 413 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அனர்த்த முகாமைத்துவ நிலையம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. கம்பஹா மாவட்டத்திலேயே அதிகளவான குடும்பங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய கம்பஹா மாவட்டத்தில் மாத்திரம் 2 ஆயிரத்து 487 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 461 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேநேரம் வறட்சியான காலநிலை காரணமாக கேகாலை மாவட்டத்தில் 2 ஆயிரத்து 813 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 949 பேரும், பதுளை மாவட்டத்தில் 190 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# பாதிப்புற்ற பெண்கள் அமைப்பின் ஊடகச் சந்திப்பு அக்கரைப்பற்றில்!

(எம்.ஏ.ஏ.அக்தார்)

அம்பாறை மாவட்ட பாதிப்புற்ற பெண்கள்அமைப்பினால்உருவாக்கப்பட்ட இளைஞர் யுவதிகள் அமைப்பின் அங்கத்தவர்கள் இணைந்து பெண்களுக்கெதிரான வன்முறைகள் மற்றும்இளவயதுத்திருமணம், அரசியலும் பெண்களும், ஊடகமும் பெண்களும் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக இளையோர்களின் கருத்துக்களை வெளிக்கொண்டு வரும் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தினர்.



அக்கரைப்பற்றில் அமைந்துள்ள பாதிப்புற்ற பெண்கள் அரங்கத்தின் அலுவலக கேட்போர் கூடத்தில் இணைப்பாளர் நடராஜா சுமந்தி தலைமையின் கீழ், திட்ட இணைப்பாளர் ஞா.உசாநந்தினி ஒருங்கிணைப்பில் நல்லிணக்கம் சார்ந்த இளையோரின் பங்களிப்பும் ஒத்துழைப்பும் எனும் தலைப்பில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் அமைப்பின் இளைஞர் யுவதிகள் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த இளைஞர் யுவதிகள் அமைப்பின் உறுப்பினர்கள், பெண்கள் தொடர்ந்தும் வன்முறைகளுக்கு உட்படுத்தப்படுவதாகவும் அதில் மீள்வதற்கான பொறுப்பும் கடமையும் தற்போது இளைஞர் யுவதிகள் கைகளிலும் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்ப்பு குரலை எழுப்ப வேண்டிய கட்டாய சூழ்நிலைக்குள் தாம் தள்ளப்பட்டுள்ளதாகவும் கூறினர்.

இலங்கை சனத்தொகையில் பெண்கள் 50 வீதமாக காணப்பட்டாலும் இன்று வரை அவர்களுக்கெதிரான வன்முறை அதிகரித்துக்கொண்டு செல்வதாகவும், குறிப்பாக ஊடகத்துறைக்குள் நுழையும் தங்களைப் போன்ற பெண்களுக்கு சமூகத்தில் உரிய அங்கீகாரம் கிடைப்பதில்லை எனவும் கூறினர்.

இளவயதுத் திருமணத்தால் பெண்கள் அதிகமாக பாதிக்கப்படுவதாகவும் இதில் இருந்து மீள நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் கருத்துரைத்தனர்.

சமூக ஊடகங்களுக்குள் சிக்கித்தவிக்கும் இளம் சமூகத்தினரை மீட்டெடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் இது தொடர்பான பயிற்சிப் பட்டறைகளை நடாத்தி வரும் பாதிப்புற்ற பெண்கள் அமைப்பிற்கும் வெளிக்கொண்டுவரும் ஊடகங்களுக்கும் நன்றி கூறினர்.

இன்றைய இளம் சமூகம் எதிர்காலத்திற்கு உதாரணமாக இருக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.



## அம்பாறை மாவட்டப் பூப்பந்தாட்ட போட்டியில் காரைதீவு பிரதேச செயலக அணிக்கு முதலிடம்

(வி.ரி. சகாதேவராஜா)

அம்பாறை மாவட்ட விளையாட்டு விழாவின் பூப்பந்தாட்டப் பெண்கள் போட்டிகளில் காரைதீவு பிரதேச செயலக அணி முதலிடத்தைப் பெற்றது.

இப்போட்டிகள் அம்பாறையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன.

இறுதிப் போட்டியில் பெண்கள் பிரிவில் காரைதீவு பிரதேச செயலக அணி வெற்றிபெற்று முதலிடத்தைப் பெற்றுக்கொண்டது. இரண்டாமிடம் அம்பாறை பிரதேச செயலக அணிக்குக் கிடைத்தது.




## அன்னை பூபதியின் 36 வது நினைவு திருகோணமலையில் நிகழ்வு



(ஹஸ்பர் ஏ.எச்)

அன்னை பூபதியின் 36 வது நினைவு நாள் நிகழ்வு இன்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டப்பணிமனையில் மாவட்டத் தலைவர் சண்முகம் குகதாசன் தலைமையில் நடைபெற்றது.

இதில் கட்சியின் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர் கலந்து கொண்டு சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

இந்திய இராணுவத்தின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, அவர்களை வெளியேற வரலியுறுத்தி மட்டக்களப்பு நகரின் மாமாங்க ஈஸ்வரர் ஆலயம் முன்பாக 1988 மார்ச் 19 இன்று உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருந்த அன்னை பூபதி அதே ஆண்டு ஏப்ரல் 19 இல் உயிர் நீத்திருந்தார்.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அன்னையர் முன்னணியின் செயற்பாட்டாளராகவும் அவர் இருந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பொன்விழாக் காணும்

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## முதலாவது சர்வதேச கல்வியியல் ஆய்வு மாநாடு நாளை



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - 'யாழ்ப்பாண வளாகம்' எனும் பெயரில் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் ஓர் அங்கமாக ஆரம்பிக்கப்பட்டு இவ்வருடத்துடன் ஐம்பதாண்டைப் பூர்த்தி செய்து பொன்விழாக் காண்கின்றது.

ஈழத் தமிழர்களின் அறிவுக் கருவூலமாகத் திகழும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தமிழ்ச் சமூகத்தின் இருப்புக்கும் வளர்ச்சிக்கும் ஆற்றிய பங்களிப்பு ஏராளம். அந்த வகையில் ஐம்பதாவது ஆண்டு நிறைவிலும் அது புதிய பல பரிமாணங்களைப் பிரசவிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தவகையில், முதலாவது சர்வதேச கல்வியியல் ஆய்வு மாநாட்டை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர்பட்டப்படிப்புகள் பீடமும் கலைப்பீடத்தைச் சேர்ந்த கல்வியியல் துறையும் இணைந்து ஒழுங்கமைத்துள்ளன.

"நாளையை வலுப்படுத்தல் - கல்வியின் போக்குகளும் அவற்றை புரிந்துகொள்ளவும் உள்வாங்கவும் வடக்கு மாகாணத்தின் இயலுமைகள்' எனும் கருப்பொருளில் இம்மாநாடு திட்டமிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராசா தலைமையிலும் உயர்பட்டப்படிப்புகள் பீடப் பீடாதிபதி பேராசிரியர்செ. கண்ணதாசன் மற்றும் கலைப் பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் ஆகியோரின் இணைத்தலைமையிலும் இந்த ஆய்வுமாநாடு அரங்கேறவுள்ளது.




கல்வியியல் துறைத் தலைவர் கலாநிதி ஆ.நித்திலவர்ணன் மாநாட்டின் இணைப்பாளராகச் செயற்படுகின்றார். வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிரஞ்சன் மற்றும் வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோன் குயின்ரஸ் ஆகியோர் இந்நிகழ்வில் சிறப்பு விருந்தாளர்களாகக் கலந்துகொள்கின்றனர்.

நாளை 20 ஆம் திகதி சனிக்கிழமையும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் காலை மற்றும் மாலை அமர்வுகளாகத் திட்டமிடப்பட்டுள்ள இம்மாநாட்டின் காலை அமர்வுகள் கைலாசபதி கலையரங்கிலும் மாலை அமர்வுகள் உயர்பட்டப்படிப்புக்கள் பீடத்திலும் நடைபெறவுள்ளன.



சனிக்கிழமை நடைபெறவுள்ள அங்குரார்ப்பண நிகழ்வில் திறவுகோல் உரையினை கொழும்புப் பல்கலைக்கழக கல்வியியல் பீட கல்வி உளவியல் இருக்கைப் பேராசிரியர் மஞ்சுளா விதானபத்திரண நிகழ்த்தவுள்ளார். 'வாண்மைத்துவ விருத்திக்கான ஆய்வு மைய புத்தாக்கங்கள்: வடக்கு இலங்கையின் ஆசிரியர் கல்விக்கான தந்திரோபாய அணுகுமுறை' எனும் தலைப்பில் இவ்வுரை நிகழ விருக்கின்றது.

திறவுகோல் உரையினைத் தொடர்ந்து மாநாட்டின் கருப்பொருளை மையப்படுத்திய மையக்கருத்துரைகள் இடம்பெறவுள்ளன.

இக்கருத்தரங்கிற்கு உயர்பட்டப்படிப்புக்கள் பீடப் பீடாதிபதி பேராசிரியர் செ.கண்ணதாசன் தலைமைதாங்கவுள்ளார்.

'இலங்கையின் ஆரம்ப பிள்ளைப்பருவக் கல்வியை முறைமைப்படுத்தல் - சவால்களும் பிரச்சனைகளும்' எனும் தலைப்பில் திறந்த பல்கலைக்கழக கல்வியியல் பீடப் பேராசிரியர்.தி.முகுந்தனும், 'வட மாகாணக் கல்வியின் சமகால உள சமூக நிலைமைகள்' எனும் தலைப்பில் உளமருத்துவ நிபுணர் சி.சிவதாசும், 'இலங்கையின் பாடசாலைக் கலைத்திட்டத்தின் சவால்களும் புதிய போக்குகளும்' எனும் தலைப்பில் திறந்த பல்கலைக்கழக கல்வியியல் பீடப் பேராசிரியர் எவ்.எம்.நவாஸ்தீனும், 'சட்டத் தீர்மானங்களை அறிவிப்பதில் கல்வியியல் ஆய்வுகளின் தேவைகள்' எனும் தலைப்பில் களுவாஞ்சிக்குடி நீதவான் நீதிமன்ற நீதிபதி ஜே.பி.ஏ.ரஞ்சித்குமாரும் உரையாற்றவுள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள இரண்டாம் நாள் நிகழ்வுகளுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியல் துறைப் பேராசிரியர் ஜெயலக்சுமி இராசநாயகம் தலைமை தாங்கவுள்ளார். இந்நிகழ்வில் திறவுகோல் உரையை தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக கல்வியியல் மற்றும் மேலாண்மைத் துறைத் தலைவர் பேராசிரியர் கு.சின்னப்பன் 'தமிழ் கற்பித்தலில் புதிய போக்குகள்' எனும் தலைப்பில் நிகழ்த்தவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து 'நாளையை வலுப்படுத்தல் - கல்வியின் போக்குகளும் அவற்றை புரிந்துகொள்ளவும் உள்வாங்கவும் வட மாகாணத்தின் இயலுமைகள்' எனும் தலைப்பில் கலைப்பீடப் பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் தலைமையில் திறந்த புலமைத்துவக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் ஓய்வுபெற்ற வலயக் கல்விப்பணிப்பாளரும் அதிபருமாகிய என். தெய்வேந்திரராஜா, கல்வியியல் ஆய்வாளரும் அகவிழி மற்றும் ஆசிரியம் சஞ்சிகைகளின் ஆசிரியருமான தெ.மதுசூதனன், தேசிய கல்வி நிறுவன விரிவுரையாளர் ஐ.கைலாசபதி, கிளிநொச்சி விவேகானந்தா வித்தியாலய அதிபர் ஜெய மாணிக்கவாசகர், இலங்கை பரீட்சைகள் திணைக்களப் பணிப்பாளர் எம்.ஜீவராணி புனிதா, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் இ.செந்தில்மாறன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்லூரியின் முன்னாள் பணிப்பாளரும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் திட்ட முகாமையாளருமாகிய ஜே. ஜூட் வோல்ற்றன் மற்றும் கிளிநொச்சி வடக்கு கல்வி வலய தொழில் வழிகாட்டல் அலுவலர் சு.வீரசுதாகரன் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர். பார்வையாளர்களின் வினாக்களுக்கும் விடையளிக்கும் நிகழ்வாகவும் இக்கலந்துரையாடல் திட்டமிடப்பட்டுள்ளது.

'வடக்கு மாகாணப் பாடசாலைகளின் வெற்றிகளும் பின்னடைவுகளும்', 'பாடசாலைகளும் சமூகமும் - எங்கு நாம் நிற்கின்றோம் - முன்னோக்கிப் போவதற்கான வழிகள்', 'எதிர்பார்க்கப்படும் கற்றல் பேறுகளை அளவிடுதல்', மற்றும் 'கல்வியும் வேலைவாய்ப்பும் - சந்தர்ப்பங்களும் சவால்களும்' எனும் தலைப்புக்களில் இக்கலந்துரையாடல் கட்டமைக்கப்பட்டுள்ளது. கலந்துரையாடலின் கருத்துச்செறிவுகளை மாநாடு நிறைவுபெற்ற பின்னர் கொள்கை ஆவணமாக வெளியிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இரண்டு நாள்களும் மாலை அமர்வுகள் பலாலி வீதியில் அமைந்துள்ள உயர்பட்டப்படிப்புக்கள் பீடத்தில் நடைபெறும். இரண்டு நாள் மாலை அமர்வுகளிலும் தலா நாற்பத்து நான்கு ஆய்வுக் கட்டுரைகள் பல்வேறு தலைப்புக்களிலும் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

பல்கலைக்கழகங்களின் ஆய்வு மாணவர்கள், விரிவுரையாளர்கள், கல்வியியல் கல்லூரிகள் மற்றும் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஆசிரியக் கல்வியலாளர்கள், கல்வி நிர்வாகிகள், பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் என பன்முகப்படுத்தப்பட்ட ஆய்வாளர்களினால் பல்வேறு தலைப்புக்களில் ஆய்வுக் கட்டுரைகள் முன்வைக்கப்படவுள்ளன.



# இலங்கை நூலக சங்கத்தின் 18 வது தேசிய ஆய்வு மாநாடு



(நூருல் ஸுஹதா உமர்)

இலங்கை நூலக சங்கத்தின் 18 வது தேசிய ஆய்வு மாநாடு, தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் தொழிநுட்பவியல் பீட கேட்போர் கூடத்தில், நூலக சங்க ஆய்வுக்குழுவின் ஒருங்கிணைப்பாளரும் தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகருமாகிய கலாநிதி முஹம்மட் மஜீட் மஸ்றூபா தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இலங்கை நூலக சங்கம் 1024 அங்கத்தவர்களைக் கொண்ட, நூலகர்களுக்கான தொழில் முறை தராதரங்களைப் பேணுகின்ற, நூலகவியல் மற்றும் தகவல் விஞ்ஞானத்தில் கற்கை நெறிகளை நடாத்துகின்ற ஒரு தொழில்சார் சங்கமாகும். இந்நிறுவனம் தனது வருடாந்த மாநாடுகளை தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் நடத்தி வருகின்றது. இம்முறை 18 வது தேசிய ஆய்வு மாநாடு 'நூலகங்கள் மற்றும் சமூகத்தின் இணைப்பு: சமூக விரிவாக்கல் சேவைகள் மூலம் பிணைப்பினை வலுப்படுத்தல்" எனும் தலைப்பின் கீழ் இடம்பெற்றது.

இவ்வருடம் வித்தியாசமான முறையில் இலங்கையின் தேசிய மொழிகளை முதன்மைப்படுத்தி மும்மொழிகளிலும் சிங்கள மொழி, தமிழ் மொழி மற்றும் ஆங்கில மொழி மூலம் இந்த ஆய்வு மாநாடு நடத்தப்பட்டது. இலங்கை நூலக சங்கத்தின் தற்போதைய தலைவர் பிருத்தி லியனகே மற்றும் முன்னாள் தலைவர் கலாநிதி ஆனந்த திஸ்ஸ ஆகியோரின் நெறிப்படுத்தல்களில் ஆய்வு அமர்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக தென்கிழக்கு பல்கலைக்கழக கலை கலாச்சார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி எம்.எம். பாஸிலும், முதன்மை பேச்சாளராக பேராதனை பல்கலைக்கழக நூலகர் ஆர். மகேஸ்வரனும், கௌரவ அதிதிகளாக கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் என். மணிவண்ணன், கிழக்கு பல்கலைக்கழக நூலகர் கலாநிதி டபிள்யூ.ஜெ. ஜெயராஜ், தென்கிழக்கு பல்கலைக்கழக தொழிநுட்பவியல் பீட பீடாதிபதி கலாநிதி யூ.எல். அப்துல் மஜீத் ஆகியோர் கலந்து சிறப்புச் சொற்பொழிவாற்றினர். கிழக்கு பல்கலைக்கழக பிரதி நூலகர் எஸ். சாந்தஷரூபன் இணைத் தலைவராக பங்கேற்றிருந்தார்.

முதன்மை அமர்வின் தலைமையினை யாழ்ப்பாண பல்கலைக்கழக பதில் நூலகர் கலாநிதி திருமதி கே. சந்திரசேகர் ஏற்றிருந்தார்.

மாநாட்டின் செயலாளராக யாழ்ப்பாண பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர் திருமதி ஜெனனும், இணைச் செயலாளராக கல்முனை பொது நூலகர் ஏ.எல்.எம். முஸ்தாக்கும் பங்கேற்றனர்.

இம்மாநாட்டில் பொதுநூலகர்கள், பாடசாலை நூலகர்கள், விசேட நூலகர்கள் மற்றும் பல்கலைக்கழக நூலகர்கள் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்தனர். அந்த வகையில் இம்முறை தமிழ்மொழி மூலம் கிழக்கு மாகாணத்தில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த ஆய்வு மாநாடு இரண்டு கட்ட அமர்வுகளாக இடம்பெறுகின்றது. முதல் அமர்வு இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக தொழிநுட்ப பீட, தொழில்நுட்பவியல் பீட கேட்போர் கூடத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றதுடன் இரண்டாவது அமர்வு ஏப்ரல் 26 ஆம் திகதி கம்பஹா பொது நூலகத்தில் சிங்கள மொழி மூலம் நடைபெற உள்ளது.

இம்மாநாட்டுக்கு பல்கலைக்கழக நூலகர்கள், பீடாதிபதிகள், நிருவாக உத்தியோகத்தர்கள், கிழக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி மன்ற ஆணையாளர்கள், செயலாளர்கள், இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் தொழில்சார் நூலக வல்லுனர்கள், நூலகப் பணியாளர்கள் மற்றும் நூலகவியலைக் கற்கின்ற மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# உணவு கையாளுபவர்களுக்கான ஆலோசனை, தடுப்பூசி வழங்கல்

(எம்.எம்.றம்ஸீன்)

உணவு கையாளுவர்களுக்கான ஆலோசனைக் கருத்தரங்கும் தடுப்பூசி வழங்குதல் மற்றும் மருத்துவ பரிசோதனை செய்து சான்றிதழ் வழங்கும் நிகழ்வுகள் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இடம்பெற்றன. காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் தஸ்லீமா பஷீரின் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் மேற்பார்வை பொது சுகாதாரப் பரிசோதகர், பொதுச் சுகாதார பரிசோதர்கள் மற்றும் உணவு கையாளுபவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.




# சிங்கள மொழித் தொடர்பாடல் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு



(வி.ரி.சகாதேவராஜா)

நீதி அமைச்சின் தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான செயலகத்தின் அனுசரணையுடன் திருக்கோவில் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற இளைஞர் யுவதிகளுக்கான 100 மணித்தியாலங்கள் கொண்ட சிங்கள மொழித் தொடர்பாடல் பயிற்சி பாடநெறியை பூர்த்தி செய்தோருக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் வழிகாட்டலின் கீழ் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி. எஸ். நிருபா தலைமையில் தேசிய ஒருமைப்பாட்டு இணைப்பாளர் ஏ.ஆன்ஸி யுரேமினியின் ஒருங்கிணைப்பில் இந்நிகழ்வு அண்மையில் முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பாடநெறியின் வளவாளரான சுதேஷ் ருஷாந்தன் மற்றும் பாடநெறியை பூர்த்தி செய்த இளைஞர் யுவதிகள் கலந்துகொண்டனர்.

# அன்னை பூபதியின் நினைவு தினம் கிளிநொச்சியில் அனுட்டிக்கப்பட்டது

கிளிநொச்சி மாவட்டத்தில் இன்று தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் அன்னை பூபதியின் நினைவு தினம் அனுட்டிக்கப்பட்டது.

குறித்த நிகழ்வானது இன்று காலை 8 மணியளவில் கிளிநொச்சி பொது சேவை சந்தை முன்பாக இடம் பெற்றிருந்தது.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் மற்றும் முன்னாள் கரைச்சி பிரதேச சபை தவிசாளர் வேழமாலிகிதன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்திய அமைதிப்படைகள் இலங்கையில் குறிப்பாக வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்குள் முகாம் அமைத்து இருந்த காலகட்டத்தில் அன்னை பூபதி சாகும் வரை உண்ணாவிரதம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

தனது போராட்டத்தை அவர் ஆரம்பிப்பதற்கு முன்னமே இந்திய படை அதிகாரிகளுடன் பல பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. ஆயினும் தனது முடிவில் உறுதியாக இருந்த அன்னை பூபதி, தான்இந்தப் போராட்டத்தின்போது நோய்வாய்ப்பட்டாலோ சோர்ந்து போனாலோ தனது கணவரோ அல்லது பிள்ளைகளோ தன்னை வைத்தியசாலையில் அனுமதிக்க முயற்சிக்கக் கூடாது என கடிதம் எழுதி வைத்துக்கொண்டு போராட்டத்தை ஆரம்பித்திருந்தார்.

அன்னை பூபதி தனது 56 வயதில் தன் இன்னுயிரை அகிம்சைப் போராட்டத்தில் ஈந்து, ஒரு வரலாற்று காவியமானார், என்பதை நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் நினைவுகூர்ந்திருந்தனர்.




# போதைப் பொருளுடன் கைதாகிய சந்தேக நபர் சட்ட வைத்தியரின் அறையிலிருந்து தப்பியோட்டம்

'யுக்திய' தேடுதல் நடவடிக்கையின் போது போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை சட்ட வைத்தியரிடம் ஒப்படைத்த போது, குறித்த சந்தேக நபர் வைத்தியருக்கும் பொலிஸாருக்கும் தெரியாமல் அங்கிருந்து ஜன்னல் வழியாக தப்பிச்சென்ற சம்பவம் தொடர்பில் தும்மலசூரிய பொலிஸார் விசேட விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்த சந்தேக நபரை இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் குளியாபிட்டிய சட்ட வைத்திய அதிகாரியிடம் அழைத்துச் சென்ற போது, மேற்படி சட்ட மருத்துவர் அந்த பொலிஸ் உத்தியோகத்தர்களை அறையிலிருந்து வெளியே செல்லுமாறு கேட்டுக் கொண்டுள்ளார். இதனையடுத்து சட்ட வைத்திய அதிகாரி சந்தேக நபரின் கைவிலங்குகளை கழற்றி விசாரணைகளை ஆரம்பித்துள்ளார். இதன் போதே சந்தேக நபர் அங்கிருந்து தப்பியோடியுள்ளார். சட்ட வைத்தய அதிகாரியின் பார்வையிலிருந்து இவர் எப்படி தப்பிச் சென்றார் என்பது மர்மமாக இருப்பதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போதைப்பொருள் மற்றும் இரண்டு கிராம் ஹெரோயினுடன் குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டிருந்தார். சட்ட வைத்திய அதிகாரியின் அறையில் தாதியர்களும் கூடவே இருந்த வேளையில் சந்தேக நபர் தப்பி ஓடியதால் போதைப்பொருள் வலையமைப்பில் வெளிவர வேண்டிய பலதகவல்களை வெளிக்கொணருவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

(ரெசி-79)

# பூச்சிக்கடிக்கு இலக்காகிய நபர் யாழில் உயிரிழப்பு

யாழ்ப்பாணத்தில்பூச்சிக்கடிக்கு ,லக்காகிய நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

பூச்சிக் கடியினால் ஏற்பட்ட சுகவீனத்தின் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நபர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

52 வயதுடைய குறித்த நபர், காதின் கீழ்ப் பகுதியில் பூச்சியொன்று கடித்ததனால் ஏற்பட்ட கடுமையான வலியின் காரணமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

எந்த வகையான பூச்சி தனக்குக் கடித்தது என்பதை அவரால் அடையாளம் கண்டிருக்க ,யலவில்லை.

இந்நிலையில் குறித்த நபருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தபோதும், நேற்று (18) அவர் உயிரிழந்துள்ளார் என மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்தன.






## புதிய சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் நியமனம்



(சர்ஜூன் லாபீர்)

சம்மாந்துறை பிரதேச செயலகத்தின் புதிய சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளராக ஒலுவிலைச் சேர்ந்த எம்.பி.எம் /ஹுசைன் நேற்று தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல். முஹம்மது ஹனீபா, உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம், நிர்வாக உத்தியோகத்தர் ஜே.எம்.ஜெமில், சமூர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

எம்.பி.எம் /ஹுசைன் அக்கரைப்பற்று, நிந்தவூர், சம்மாந்துறை ஆகிய பிரதேச செயலகங்களில் கடமையாற்றி தற்போது தலைமைப்பீட முகாமையாளராக பதவியுயர்வு பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

## தென்கிழக்குப் பல்கலையில் பல்கலாசார நிகழ்வுகள்



(எம்.எம்.றம்ஸீன்)

தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஒலுவில் இளைஞர்கள் இணைந்து வழங்கிய இன நல்லுறவுக்கு வழிகாட்டும் பல்கலாசார காட்சிப்படுத்தல் நிகழ்வு தென்கிழக்கு பல்கலைக்கழக வளாகத்தில் இடம்பெற்றது.

தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசியர் கலாநிதி றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாக கலந்து கொண்ட மேற்படி நிகழ்வில் இந்து, இஸ்லாமிய, பௌத்த மற்றும் கிறிஸ்தவ மத கலாசார நிகழ்வுகள் நடைபெற்றன

## மின்சார மறுசீரமைப்புத் திருத்தம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டது

மின்சாரத்துறை மறுசீரமைப்பு திருத்த சட்டமூலம் தொடர்பான வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, தமது எக்ஸ் கணக்கில் குறிப்பொன்றையிட்டு இதனைத் தெரிவித்துள்ளார்.

இது எதிர்வரும் வாரத்தில் நாடாளுமன்றத்தில் அது சமர்ப்பிக்கப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (04)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.04.2024இல் வெளியிடப்பெற்றது.